**தலைப்பு 329 – தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 03 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்களிலிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் விடுக்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி ஏடுகளின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் இறுதி மீதி ரூபா 41,672,672 ஆக இருந்த போதிலும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 43,172,793 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக சொத்துக்கள் ரூபா 1,500,121 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஒதுக்கங்களின் பெறுமதியும் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அம்மீதியின் வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | திறைசேரி ஏடுகளுக்கும் திணைக்கள ஏடுகளுக்கு மிடையே ஆரம்ப மீதியில் காணப்பட்ட வித்தியாசத்தினால் திணைக்கள ஏடுகளின் பிரகாரம் காணப்பட்ட மீதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டதனால் பெறுமதி மாற்றமடைந்திருந்தும் ஆரம்ப மீதியை சரி செய்வதற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

**1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களம் ஏனைய செலவு விடயங்களுக்காக செலவு செய்த உள்ளபடியான செலவு ரூபா 6,118,037 ஆக இருந்த போதிலும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 6,322,077 ஆக ரூபா 204,040 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு கணக்கிணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | சரியானது. திறைசேரியின் கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | ஆளணி வேதனம், செயற்பாட்டுச் செலவுகள். நிவாரணம் மற்றும் மாற்றல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 337,681,982 செலவு சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்கப் பட்டிருக்கவில்லை. | காசுப் பாய்ச்சல் கூற்றுக்குரிய பெறுமதிகள் சரியாக செம்மையாக்கப் படுதல் வேண்டும். | சரியானது. மேற்கொள்ளப் பட்ட செலவுகளை சம்பளங்கள் கூலிகள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்களுக்கு உட்பட்டவற்றிற்கு மேலதிகமாக ஏனைய செலவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. |
| (இ) | ஆண்டின் போது ரூபா 2,421,071 தொகையான மூலதனச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 699,521 ஆக காட்டப்பட்டதன் காரணமாக காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,721,550 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியானது. திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட்டது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட மீண்டு வரும் மற்றும் மூலதனச் செலவுகளின் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் முறையே 16 சதவீதம் மற்றும் 24 சதவீதம் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க வருடாந்த மதிப்பீடு செய்தலனாது நடைமுறைச் சாத்தியமாக செய்யப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வருடாந்த மதிப்பீட்டினை நடைமுறைச் சாத்தியமாகவும் வினைத்திறனாகவும் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | மீண்டுவரும் செலவுகளுக்காக செலவு விடய இலக்கம் 1409 இன் கீழ் ரூபா 62,710,713.00 தொகையான விலைப் பட்டியல்கள் கிடைத்திருந்தும் கட்டுநிதி கிடைக்காமையின் காரணமாகவும் மூலதனச் செலவுகளின் கீழ் 2106 செலவு விடயத்திற்காக இறுதி விலைப்பட்டியல்களை செலுத்துவதற்கு சமர்ப்பிக்காமையின் காரணமாகவும் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் 02 மீண்டுவரும் செலவு விடயங்களின் ரூபா 900,000 தொகையான நிதி ஏற்பாடு நி.பி 66 - 69 இன் கீழ் 10 சதவீதத்திலிருந்து 87 சதவீதம் வரை குறைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | - மேற்படி - | 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாட்டில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலைமையின் காரணமாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், மற்றும் உத்தியோகத்தர் களின் பங்குபற்றுதல் குறைவாகக் காணப் பட்டதனால் உள்நாட்டு பிரயாணச் செலவுகள் செலவு விடயத்தின் கீழ் செலவுகளின் தேவைப்பாடு உருவாகியிருக்காததனால் அந்த நிதி ஏற்பாடுகள் நி.பி 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களின் கீழ் மாற்றப்பட்டிருந்தது. |
| (இ) | ஒரே செலவுத் தலைப்புக்களுக்குள் ஒரே பெறுமதியில் நி.பி 66 மாற்றல்களின் மூலம் அதிகரிப்புக்கள் மற்றும் | - மேற்படி - | நி.பி 66 மாற்றல்களின் மூலம் நிதி ஏற்பாட்டுத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்து கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | குறைப்புக்கள் அவதானிக்கப்பட்டன. | | பத்திரங்களைச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மீண்டும் உரிய செலவு விடயங்களுக்காக மேலதிக நிதி ஏற்பாடு வழங்கியதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. |
| (ஈ) | 329-1-1-0-1303 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு முழுவதுமான ரூபா 100,000 தொகை ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தது. இச்சேமிப்புக்கான காரணம் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | ஒரு செலவு விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட முழுப் பணமுமான ரூபா 100,000.00 தொகை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை உரிய நிதி ஏற்பாட்டுப் பணம் சம்பந்தமான செலவு அறிக்கை அல்லது மீள ஒப்படைக்கப்பட்டது என்பதற்காக எதுவித கடிதத்தின் மூலமும் தெரியப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | மீளாய்வாண்டின் போது 06 செலவு விடயங்களுக்காக ரூபா 2,915,000 தொகையான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக அந்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 1,026,732 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 33 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் வரையிலான வீச்சுடைய அளவில் காணப்பட்டது. | - மேற்படி - | செலவுத் தேவைப்பாடு உருவாகியிருக்காமை, ஆதனக் கடன் வட்டி செலுத்துகின்ற உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லல், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கொடுப்பனவு நடவடிக்கைகளுக்காக விலைப் பட்டியல்கள் சமர்ப்பித்திருக்காமை முதலிய விடயங்கள் காரணமாக இருந்தன. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 18 பிரதான செயற்பாடுகளுடன் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அத்திட்டத்துடன் உரிய ஆண்டிற்கான நாளதுவரையாக்கப் பட்ட நிறுவனத்தின் தாபன கட்டமைப்பு, அங்கீகரித்த பதவியணியினர் மற்றும் தற்பொழுது சேவையிலுள்ள பதவியணியினர் தொடர்பான விபரம், கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம், பெறுகைத் திட்டம் என்பன சமர்ப்பிக்ப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் படாதிருந்தும் அந்த ஆவணம் தயாரிக்கப்பட்டிருந்தது எனவும் 2020 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு அந்த விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் கட்டுநிதித் தேவைப்பாட்டிற்கான மதிப்பீடு மற்றும் பெறுகைத் திட்டமானது தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. |

**3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 18 செயலாற்றல் குறிகாட்டிகளில் ITMIS இனை அமுல்படுத்துவதன் கீழ் 25 மாவட்டங்களில் அரசாங்க உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், தகவல் தொழில்நுட்பத்திற்காக அரசாங்கத்தின் ஊக்குவிப்புச் செயற்திட்டமாக Application Mobile App இனை அபிவிருத்தி செய்யும் போட்டிகளை அரசாங்க | திட்டமிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | ஒட்டுமொத்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை 2019 யூன் மாதம் ஏனைய பயிற்சி நடவடிக்கைகளுக்காக செலவு செய்ய வேண்டியதன் காரணமாக நிதி ஏற்பாடு இல்லாமைச் சிக்கலின் அடிப்படையில் திட்டமிட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும் இயலுமை இல்லை என 2019 ஆம் ஆண்டில் |

| | | |
|---|---|---|
| ஊழியர், பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை மட்டத்தில் நடாத்துதல் மற்றும் பதவியணியிலுள்ள அனைத்து உத்தியோகத்தர் களுக்காக வருடாந்த வெளியார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல் ஆகிய 03 குறிகாட்டிகள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் சனாதிபதித் தேர்தலின் காரணமாக 2019 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிதிச் சிக்கலின் காரணமாக செலவு முகாமைத்துவத்திற்காக வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு இணங்க இப்போட்டிக்காக பணத்தை ஒதுக்கீடு செய்வதற்கும் இயலுமை காணப்படவில்லை என மற்றும் வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக செலவு செய்வதற்கு மிகுதிப் பணம் போதியதாக இல்லாததனால் அந்நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும் இயலுமை காணப்படவில்லை. |

## 3.3 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்வரும் செயலாற்றல் குறிகாட்டிகளில் சிறந்த செயலாற்றல் அவதானிக்கப்படவில்லை. | | |
| (i) சம்பளம் செலுத்தும் முறைமையை விரிவுபடுத்துவதற்காக நிதி அமைச்சின் 14 திணைக்களங்களுக்காக சம்பளம் செலுத்தும் முறைமையை செயற்படும் மட்டத்திற்கு கொண்டு வருவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 06 | எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஈ சம்பளம் மென் பொருளை அமுல்படுத்துதல் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ இடம்பெறுவதுடன் அவர்கள் முறைமையை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற தொழில்நுட்ப ரீதியான மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களங்களுக்காக அது அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் 08 திணைக்களங்களில் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | செயற்பாட்டு ரீதியான சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படுகின்றது. |
| (ii) | நாடு முழுவதும் முறைமையை அமுல்படுத்துவதற்காக ஏனைய நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் மற்றும் தேவையான ஒன்றுகூடும் செயற்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிகழ்ச்சித் திட்டத்தை நாடு முழுவதும் அமுல்படுத்துதலை இரண்டாம் கட்டமாக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் மூலம் மேற்பார்வை மற்றும் அமுல்படுத்துதல் இடம்பெறுகின்றது எனவும் ஆரம்ப கட்டத்தில் திறைசேரி திணைக்களத்தில் அமுல்படுத்தி அதன் வெற்றித் தன்மையை மேற்பார்வை செய்து அதன் பின்னர் நாடு முழுவதும் அமுல்ப்படுத்த வேண்டிய முறைமை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பகுப்பாய்வு செய்தலினை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | தனியான வழி முறைமையை அமுல்படுத்தலின் கீழ் நாடு முழுவதும் அதனை அமுல்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இனங்காண்தல் போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்காத துடன் நடைமுறையை டிஜிட்டல்படுத்துவதும் இடம்பெற்றிருக்கவில்லை. | - மேற்படி - | Single Window மென்பொருள் 2018 நவம்பர் 26 ஆந் திகதியிலிருந்து நேரடியாக (live run) அமுல்படுத்தப்படுகின்றது. அந்த மென்பொருள் பயன்படுத்துதலினை இணையத்தளங்களின் மூலம் செலுத்துவதற்காக மென்பொருட்களை அபிவிருத்தி செய்யப்பட்டு மேற்கூறிய முறைமைக்கு ஒன்று சேர்க்கப்பட்டது. கொடுப்பனவு வழியை (Payment Gateway) |

| | | | |
|---|---|---|---|
| | | | பரீட்சித்தல் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், உள்நாட்டு வங்கிகளின் மூலம் ஒன்லைன் கொடுப்பனவிற்குத் (online Payment) தேவையான வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், ICTA நிறுவனம் தேசிய வணிக வழியை (National Trade Portal) ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டதன் பின்னர் Single Window செயற்திட்டமும் அதன் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளது. |
| (ஆ) | அரசாங்க நிதி முகாமைத்துவ செயற்திறன் செயற்திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட ITMIS கணனி மென்பொருளை அமுல்படுத்தும் நடவடிக்கையானது 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் எதிர்பார்த்த மட்டத்தில் அமுல்படுத்தப்படவில்லை என வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. | திட்டமிடப்பட்ட குறிக்கோள்களை ஆக்கபூர்வமாக அடைந்து கொள்வதற்காக கணனி முறைமையை அமுல்படுத்துவ தற்குத் தேவையான நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ளுதல் வேண்டும். | ITMIS முறைமையின் பாதீட்டு திட்டங்கள், பாதீட்டு ஒதுக்கீடு, முறைமை நிருவாகம், பிரதான பேரேட்டு மொடியூல் என்பன 2019 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டன. அவற்றில் பாதீட்டு திட்டங்கள் பாதீட்டு ஒதுக்கீட்டு மொடியூல்கள் என்பன அரசாங்கத்தின் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்களினால் பயன்படுத்தப்பட்டது. ITMIS முறைமையின் ஏனைய மொடியூல்களை அரசாங்கத்தின் செலவில் நிறுவனத்தில் ஸ்தாபிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் 2019 யூலை மாதம் வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய பெறுகை நடவடிக்கையானது 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பூர்த்தி செய்யப்பட்டது. |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) அங்கீகரித்த பதவியணியிலுள்ள 08 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அது அங்கீகரித்த பதவியணியில் 17 சதவீதமாகும். இவ்வெற்றிடங்களில் சிரேஸ்ட மட்டத்திலுள்ள 06 பதவிகள் காணப்பட்டதுடன் இப்பதவிகள் தொடர்ச்சியாக வெற்றிடமாகக் காணப்பட்டன. | திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்து மாயிருந்தால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அவ்வாறு இல்லாதுவிடின் அங்கீகரித்த பதவியணியைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளுக்கு மத்தியில் ஒரு பதவியான பணிப்பாளர் நாயகம் பதவி 2020 சனவரி 07 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட்டுள்ளது. திணைக்களத்திற்காக அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையில் 1/3 இற்கு அண்மித்த எண்ணிக்கையானது சிரேஸ்ட மட்ட பதவிகளாக உள்ளதுடன் முன்வரிசை பதவியணியினர்களுக்கான அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையில் பற்றாக்குறை காணப்படுவதனால் திணைக்களத்தின் பதவியணியினர் தொடர்பான ஆய்வினை மேற்கொள்ளுமாறு முகாமைத்துவ திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட சில பதவிகளை கீழ்ப்படுத்துவதற்கு யோசனை தெரிவித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) உதவிப் பணிப்பாளர் (வெளிநாட்டு செயற்திட்டம்) பதவியானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2018 நவம்பர் 23 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த பதவியணியினை திருத்தம் செய்வதற்கு | பிரதி / உதவி (வெளிநாட்டு செயற்திட்டங்கள்) பதவிகளை கீழ்படுத்துவதற்கு யோசனை தெரிவித்து முகாமைத்துவ சேவைகள் |

| | | |
|---|---|---|
| போதிலும் ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து உரிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்திற்கு அவதானிப்புக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |